



# நமது SME-களின் தொடர்ச்சியான வளர்ச்சியையும் உயிரோட்டத்தையும் ஆதரித்தல்



MTI
MINISTRY OF TRADE AND INDUSTRY SINGAPORE

“ நமது சிறு, நடுத்தரத் தொழில் சங்கங்கள் (SME-கள்) நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். அவை வேலைவாய்ப்பை வழங்குவதோடு, வளர்ச்சிக்கும் புத்தாக்கத்திற்குமான முக்கிய உந்துசக்திகளாகவும் திகழ்கின்றன.

பல ஆண்டுகளாக, நமது சிறு, நடுத்தரத் தொழில் சங்கங்கள் பல சோதனைகளைக் எதிர்நோக்கியுள்ளன. அவை மீள்திறனுடன் திகழ்ந்து, விரைவாகத் தம்மைத் தகவமைத்துக்கொண்டு, தீர்க்கமாக உருமாறியுள்ளன.

எதிர்காலத்தில் உள்ள சவால்களைச் சமாளிக்க அரசாங்கம் அவர்களுடன் தொடர்ந்து பயணிக்கும். இதன் மூலம் அவர்கள் தங்கள் வணிகத்தை மேம்படுத்த முடியும்.

நமது சிறு, நடுத்தரத் தொழில் சங்கங்களுக்கு உதவ நம்மிடம் பல்வேறு ஆதரவுத் திட்டங்கள் உள்ளன; மேலும் பலவற்றைச் செய்ய உறுதிகொண்டுள்ளோம். ”

**துணைப் பிரதமரும் வர்த்தக, தொழில் அமைச்சருமான**
**திரு கான் கிம் யோங்**

## சிறு, நடுத்தரத் தொழில் சங்கங்களுக்கான ஆதரவு திட்டங்கள்

### உயரும் வணிகச் செலவுகளைச் சமாளித்தல்

- 2024ஆம் ஆண்டில் **$1.3 பில்லியன் நிறுவன ஆதரவுத் தொகுப்பு**
- மதிப்பீட்டு ஆண்டு 2025 ’இல் **50 சதவீதம் நிறுவன வருமான வரிக் கழிவு** (ஒரு நிறுவனத்திற்கு $40,000 வரை வரம்பிடப்பட்டுள்ளது)
  - 2024’ ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் ஓர் உள்ளூர் ஊழியரைப் பணியில் அமர்த்தியிருக்கும் செயல்நிலையிலுள்ள நிறுவனங்களுக்குக் குறைந்தபட்சம் $2,000 ரொக்கப் பயனீடு

### ஊழியரணியில் முதலீடு செய்தல்

- **வெளிநாட்டு ஊழியர் கொள்கைகளில் நெகிழ்வுத்தன்மைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன** (எடுத்துக்காட்டாக: வேலை அனுமதிச்சீட்டு வைத்திருப்போருக்கான அதிகபட்ச வேலைக்காலக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன; வழக்கத்திலிருக்கும் தொழில்துறை சாரா வேலைப்பட்டியல் விரிவாக்கப்பட்டுள்ளது)
- **தொழில்நிறுவன ஊழியரணி உருமாற்றத் தொகுப்புக்காக (Enterprise Workforce Transformation Package)** $400 மில்லியனுக்கும் மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. மறுவடிவமைக்கப்பட்ட **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் நிறுவனக் கடன்கள் (SkillsFuture Enterprise Credit)**, பணி மறுவடிவமைப்புக்கு மேம்பட்ட ஆதரவுடன் கூடிய புதிய **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியரணி மேம்பாட்டு மானியம் (SkillsFuture Workforce Development Grant)**, ஆகியவை உட்பட, ஊழியரணி உருமாற்றத்தை மேற்கொள்ள நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## மின்னிலக்கமயமாக்கம், புத்தாக்கம், நிதியுதவிக்கான அணுகல் ஆகியவை மூலம் உருமாறுதல்

- **உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம் (Productivity Solutions Grant), சிறு, நடுத்தரத் தொழில் சங்கங்கள் மின்னிலக்கமயமாகும் திட்டம் (SMEs Go Digital Programme)** போன்ற திட்டங்கள் மூலம் மின்னிலக்க, செயற்கை நுண்ணறிவு (AI)-திறன் கொண்டத் திட்டங்கள் பயன்படுத்தத் தொடங்குவதற்கு ஆதரவளித்தல்

- **நிறுவன மேம்பாட்டு மானியம் (Enterprise Development Grant)** வணிக யுக்திகளை உருவாக்குதல், மனித மூலதனத்தை வலுப்படுத்துதல், நிதி நிர்வாகத் திறன்கள் போன்றவற்றை மேம்படுத்துவதன் மூலம், நிறுவனங்கள் புத்தாக்கம் செய்யவும் வளரவும் உதவுதல்.

- **தொழில்நிறுவன நிதியுதவித் திட்டத்தின் (Enterprise Financing Scheme (EFS))** வணிக யுக்திகளை உருவாக்குதல், மனித மூலதனத்தை வலுப்படுத்துதல், நிதி நிர்வாகத் திறன்கள் போன்றவற்றை மேம்படுத்துவதன் மூலம், நிறுவனங்கள் புத்தாக்கம் செய்யவும் வளரவும் உதவுதல்.

## பன்னாட்டுமயமாதல் மூலம் புதிய வணிக வாய்ப்புகளைக் கைப்பற்றுதல்

- **தொழில்நிறுவன நிதியுதவித் திட்டம் (EFS)** கீழ், EFS-வர்த்தகக் கடன்களுக்கான அதிகபட்ச கடன் தொகை நிரந்தரமாக $10 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது.

- **பன்னாட்டுமயமாதலுக்கான அனைத்துலகமயமாக்கத்திற்கான இரட்டை வரிக் கழிவு (Double Tax Deduction for Internationalisation)** 2030 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது

- சந்தை ஆயத்தநிலை உதவி **(Market Readiness Assistance)** மானியத்தின் உயர்த்தப்பட்ட உச்சவரம்பு 31 மார்ச் 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது



## நமது புறநகர்ப் பேட்டைகளுக்குப் புத்துயிரூட்டுதல்

- புறநகர்க் கடைகள் தங்கள் கடைகளைப் புதுப்பிப்பதற்காக மேம்படுத்தப்பட்ட **காட்சி வணிகத் திட்டம் (Visual Merchandising Programme)**; தகுதிபெறும் மொத்தச் செலவுகள் $60,000ஆக உயர்த்தப்பட்டுள்ளன.

- தீவு முழுவதும் உள்ள குடியிருப்பு வட்டாரத்தில் இடம் உருவாக்கும் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை ஆதரிக்க **வணிகர் சங்கங்களுக்கா**ன புதிய **துடிப்பான குடியிருப்பு வட்டாரத்திட்டம் (Vibrant Heartlands Programme for Merchants' Association)**

## தொழில்முனைப்புக்கு உகந்த சூழலை ஊக்குவித்தல்

- **சிறு, நடுத்தரத் தொழில் சங்கங்கள் தொழில்முனைப்புக்கு உகந்த அலுவலகம் (SME Pro-Enterprise Office)**: சிக்கலான ஒழுங்குமுறைப் பிரச்சினைகளைக் கையாள்வதில் வணிகங்களுக்கு உதவுதல்.

- **மேம்படுத்தப்பட்ட சிறு, நடுத்தரத் தொழில் சங்கங்கள் மையங்கள்**: பரந்த அளவிலான வணிக ஆலோசனைச் சேவைகளையும் திட்டங்களையும் வழங்குதல்.



உதவிக்கு, சிறு, நடுத்தரத் தொழில் சங்க (SME) மைய வணிக ஆலோசகர்களைத் தொடர்புகொள்ளுங்கள்.